7. அறிவிப்பு

உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் கைது குறித்து திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து 15–4–2013 ஆம் நாளிட்ட நிகரிச் செய்தியில் கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"R.C.No.253/10/SB/TVLR/2013. Reference in Thiruvallur Town Police Station Cr.No.474/12 under Section 447 IPC R/W 3(1) (xiv) SC/ ST (POA) Act, 1989 and Crl.O.P.No.9718 of 2013. In the above case, a bail petition filed by the accused Thiru M. Arun Subramanian, MLA., Tiruttani Constituency, D.M.D.K. was dismissed on 8–4–2013 and subsequently he escaped. As per Hon'ble High Court direction, Thiru M. Arun Subramanian, M.L.A. Tiruttani Constituency was arrested today at 8–30 hrs. at Manthralayam in Karnool District, Andhra Pradesh."

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் ஐந்தே நிமிடங்கள். ஐந்து நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள்.*

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி சொல்கிறேன்.*

அரசு ஊழியர்கள் வீடுகட்ட ரூ.25 இலட்சம் கடனாக வழங்குவது வரவேற்கக்கூடிய ஒன்று. குடிசைமாற்று வாரிய வீடுகள் அதிக அளவிலே கட்டுவதை வரவேற்கிறேன். கொல்கத்தா, டில்லி, மும்பை போன்ற நகரங்களைப்போல சென்னை மாநகராட்சியை விரிவுபடுத்தும் திட்டம் வரவேற்கக்கூடியது.

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*